செ.வெ.எண்.337/2009/செமதொஅ நாள்:09.10.2009

**தமிழகம் முழுவதும் அனைவருக்கும் கல்வித்திட்டத்தின் கீழ் ரூ.860 கோடியில் 31,897 வகுப்பறைகள் கட்டப்பட்டு வருகிறது - மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் தகவல்**

காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம் அய்யங்கார்குளம் ஊராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் ரூ.8.20 லட்சம் மதிப்பீட்டில் பள்ளி கூடுதல் கட்டடம், அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் ரூ.7.00 லட்சம் மதிப்பீட்டில் கூடுதல் கட்டடம் மற்றும் 132 பள்ளி மாணவ-மாணவிகளுக்கு இலவச மிதிவண்டி வழங்கும் விழா நடைபெற்றது. விழாவில் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் கலந்து கொண்டு ரூ.15 இலட்சம் மதிப்பிலான கூடுதல் பள்ளி கட்டடத்தை திறந்து வைத்து, 132 பள்ளி மாணவ-மாணவிகளுக்கு இலவச மதிவண்டிகளை வழங்கி, அதிக மதிப்பெண் பெற்ற மாணவ-மாணவிகளுக்கு பாராட்டி சான்றிதழ் வழங்கி விழாப் பேருரையாற்றிப் பேசினார்.

இந்த ஊராட்சி நெசவாளர் நிறைந்த பகுதியாகும். நெவாளர் உள்ள பகுதி என்பதால் அதிக நெசவு வேலை இருப்பதால் மாணவர்கள் அதிகம் படிக்கமாட்டார்கள் என்பது தெரியும். ஆனால் இங்குள்ள மாணவர்கள் 10ம் வகுப்பு தேர்வில் 93 சதவீதமும், 12ம் வகுப்பு தேர்வில் 96 சதவீதம் தேர்ச்சி பெற்றுள்ளதை கண்டு பெருமகிழ்ச்சி அடைந்தேன். சிறப்பாக படித்த மாணவர்களுக்கும், அசிரிய பெருமக்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இங்கு படிக்கின்ற மாணவ செல்வங்கள் சிறப்பாக படித்து 100 சதவீதம் தேர்ச்சி பெற பாடுபட வேண்டும். மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என்பதற்காக முதல்வர் கலைஞர் அவர்கள் 9100 கோடி நிதி ஒதுக்கீடு வழங்கியுள்ளார்.

தமிழகம் முழுவதும் அனைவருக்கும் கல்வித்திட்டத்தின் கீழ் ரூ.860 கோடியில் 31897 வகுப்பறைகள் கட்டப்பட்டு வருகின்றது. நபார்டு திட்டத்தின் மூலம் ரூ.770 கோடி மதிப்பீட்டில் 849 வகுப்பறைகள் கட்டப்பட்டு வருகிறது. தேர்தல் அறிக்கையில் சொன்ன அனைத்து திட்டங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன. அனைத்து ஊராட்சிகளும் அடிப்படை வசதிகள் பெற வேண்டும் என்பதற்காக அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்ட கொண்டு வரப்பட்டு ஒரு ஊராட்சிக்கு ரூ.20 இலட்சம் வழங்கப்பட்டு அனைத்து அடிப்படை வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன. தமிழகம் முழுவதும் 12500 ஊராட்சிகளில் 9 ஊராட்சிகளுக்கு நிதி வழங்கப்பட்டு தன்னிறைவு பெற்றுள்ளது. காஞ்சிபுரத்தில் விரைவில் பொறியியல் கல்லூரி, பட்டு நெசவு பூங்கா மற்றும் 6 கோடியில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட உள்ளது என தெரிவித்தார்.

இந்த விழாவில் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) டாக்டர்.இரா.ஆனந்தகுமார் இ.ஆ.ப., அவர்கள் தலைமையுரையாற்றிப் பேசியதாவது, மாணவர்கள் சிறப்பாக கல்வி பயில வேண்டும் என்பதற்காக தமிழகம் முழுவதும் பள்ளி கூடுதல் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. எனவே, மாணவர்கள் சிறப்பாக படித்து வாழ்க்கையில் முன்னேற்றம் அடைய வேண்டும் என கேட்டுக் கொண்டார். காஞ்சிபுரம் ஊராட்சி மன்றத்தலைவர் திரு.பி.எம்.குமார் அவர்கள் முன்னிலையுரையாற்றினார். திரு.சி.வி.எம்.அ.சேகர், கே.ஆறுமுகம் ஆகியோர் வாழத்துரையாற்றினார்கள். முன்னதாக பள்ளி தலைமை ஆசிரியர் திரு.க.அழகேசன் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். முடிவில் பள்ளி துணை தலைமை ஆசிரியை திருமதி.சு.சாந்தி அவர்கள் நன்றி கூறினார். மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்கள் எ.அசோகன், ஒன்றியக்குழு உறுப்பினர் திரு.அன்பழகன், ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி.சரஸ்வதி தேவராஜன் மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர், பொருளாளர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியிடுபவர்

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.